விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 256 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 15 வெள்ளிக்கிழமை (01.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய ஐவர் யாழில் கைது

### கடத்தலுக்காக மாற்றியமைக்கப்பட்ட கப் ரக வாகனம் மோ.சைக்கிள், ஒன்றரை கோடி பணம் மீட்பு




(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் கடத்தலுக்காக பிரத்தியேகமாக மாற்றி அமைக்கப்பட்ட கெப் ரக வாகனத்துடனும், ஒன்றரை கோடி ரூபாய் பணத்துடனும் 11



## சீனாவின் சினொபெக் எரிபொருள் நிலையம்

### இலங்கையில் தனது முதல் சேவையை ஆரம்பித்தது




11

### குருந்தூர்மலை விவகாரம்

# தொல்பொருள் திணைக்களம் நீதிமன்ற கட்டளையை மீறியுள்ளது

## பொலிஸாரும் தமது கடமையைச் செய்யவில்லை

### முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் உத்தரவு

(முல்லைத்தீவு) குருந்தூர்மலை விவகாரத்தில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் ஏற்கெனவே வழங்கிய கட்டளைகளை மதிக்காது நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுள்ளன. தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் முல்லைத்தீவு நீதிமன்றக் கட்டளைகளை மதித்து நடைமுறைப்படுத்தவில்லை. பொலிஸாரும் தமது கடமைகளைச் செய்யவில்லை என முல்லைத்தீவு நீதிமன்று கட்டளை வழங்கியுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)



(கோப்புப் படம்)

## பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

நேற்று முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்ரேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 13 ரூபாயினால் அதிகரித்து புதிய விலை 361 ரூபாயாக அதி 12

## பொலிஸ் அதிகாரம் வழங்க எமக்கு உடன்பாடு இல்லை

### 13 தொடர்பில் ஜே.வி.பி தலைவர் அநுர



(கொழும்பு)

இலங்கையில்பொலிஸ் துறை முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதால் பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பில் எமது கட்சி உடன்படாது.

ஆனால், காணி அதிகாரம் பற்றி பேச்சு நடத்துவதற்கு எமது கட்சி தயாராகவே உள்ளது என்று ஜே.வி.பியின் தலைவரும் 11

### நல்லூர் வீரமாகாளி ஆலயத்தில்

## உண்டியல் உடைத்து பணம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நல்லூர் வீரமாகாளி ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளது.

குறித்த திருட்டு சம்பவம் நேற்று முன் 11

## செல்வச்சந்நிதியில் மயங்கி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 11

## கனடா அனுப்புவதாக 6 பேரிடம் பண மோசடி

### யாழைச் சேர்ந்த ஒருவர் கைது

(வவுனியா)

கனடா அனுப்புவதாக கூறி வவுனியாவில் 6 பேரிடம் பணம் பெற்று மோசடி செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

வவுனியாவின் பட்டக்காடு, திருநாவற்குளம், தவசிகுளம், மல்லாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிலிருந்து தங்கம் கடத்த முயற்சி

## ஒருவர் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து கடல் வழியாக இந்தியாவுக்கு கடத்திச் செல்லப்பட்ட 14.8 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டு ள்ளது.

இலங்கையில் இருந்து கடல் வழியாக தங்கம் கடத்தப்பட்டுள்ளதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அருகே களிமண்குண்டு கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை ராமநாதபுரம் சுங்கத்துறை அதி காரிகள் சோதனை நடத்தினர்.

இதன் போது இலங்கையில் இருந்து கடல் வழியாக கடத்தி வரப்பட்டு இருசக்கர வாகனத்தில் எடுத்து வரப்பட்ட 14.8 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் இரு சக்கர வாகனத்தில் தங்கம் கொண்டு வந்த ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 03.08.2023 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

## கதிரித்தம்பி சுப்பிரமணியம்

(சுப்பண்ணா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 02.09.2023 நாளை சனிக்கிழமை காலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும் (C-7168)

வலவன் தோட்டம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

இங்ஙனம் :
குடும்பத்தினர்


# பணவீக்கம் மேலும் வீழ்ச்சி

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI) அடிப்படையிலான இலங்கையின் பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 4%. ஆக வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த ஜூலை மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் 6.3% ஆக பதிவாகியிருந்தது.

மேலும் ஜூலை மாதத்தில் -1.4 சதவீதமாக இருந்த உணவு பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் -4.8 சதவீதமாக குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16902)

தொடர்புகளுக்கு:- குரு
076 755 8606,
077 874 3204, 077 288 0152



## நாகபூஷணி திருமண சேவை

MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM,
IT Professionals, CIMA, BBA, MBA, BA

கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும். (C-7169)

264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596, 071 999 9306



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
31 - 07 - 1948

மறைவு
24 - 08 - 2021

அமரர் வில்வராஜா பத்மாவதி

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் அழியாது உங்கள் திருவுருவம்
எம் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
நம் கண்ணில் ஒளியாய் என்று இருப்பீர்கள் அம்மா

17ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் பொன்னுத்துரை வில்வராஜா

8ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் வில்வராஜா சுதாகர்

5ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் ஆனந்தராஜா நற்குணராஜா

இல.6, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(16900)

என்றும் உங்களை நினைத்துருகும்
குடும்பத்தினர்


## சாரதி மற்றும் இயந்திரசாதன இயக்குனர்களை நாட்கூலி அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை கோரல் - 2023

## மாநகர சபை யாழ்ப்பாணம்

மாநகர சபையின் தேவைகருதி சாரதி மற்றும் இயந்திரசாதன இயக்குனர்களை நாட்கூலி அடிப் படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கு, அவர்களை எமக்குத் தேவைப்படும் நேரத்தில் வழங்கக்கூடிய நிறுவனங்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படு கின்றன. இக் கூறுவிலைகளைச் சமர்ப்பிப்பதற்கான கூறுவிலைப் படிவங்களை அலுவலக நேரத்தில் மாநகரசபையின் கொள்வனவுக் கிளையில் 01.09.2023 ஆம் திகதி முதல் பெற்று, அதனைப் பூர்த்திசெய்து கடித உறையினுள் உள்ளடக்கி உறையின் இடதுபக்க மூலையில் **"சாரதி மற்றும் இயந்திரசாதன இயக்குனர்களை நாட்கூலி அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை - 2023"** எனக்குறிப்பிட்டு **ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு 15.09.2023 ஆம் திகதி, வெள்ளிக் கிழமை, முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-7171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில்

# 7 மாதங்களில் 5 ஆயிரம் முறைப்பாடுகள்

## தேசிய சிறுவர் காப்புறுதி அதிகார சபை அதிர்ச்சித்தகவல்

(கொழும்பு)

**சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான முறைப்பாடுகள் இந்த வருடம் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் காப்புறுதி அதிகார சபை தெரிவித்துள்ளது.**

ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 31ஆம் திகதி வ்ரையான காலப்பகுதியில் 5,456 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அதன் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவற்றில், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1,296 முறைப்பாடுகளும், கடுமையான காயங்கள் தொடர்பாக 163 முறைப்பாடுகளும், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான 242 முறைப்பாடுகளும் பெறப்பட்டுள்ளன.

மேலும், சிறுவர்கள் பிச்சை எடுப்பது தொடர்பில் 196 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக உதய குமார அமரசிங்க குறிப்பிட்டுள்ளார். குழந்தை பிச்சை எடுப்பது தொடர்பான முறைப்பாடுகள் பெரும்பாலும் கொழும்பு மற்றும் நகர்ப்புறங்களில் இருந்து பதிவாகியுள்ளன.

இதுதொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக ஏற்கனவே பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, அதே அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை நடை முறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டு தேசிய திட்டம் இம்மாதம் அமை ச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப் படவுள்ளது. (நி-5)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்கும்-அரசாங்கம் உறுதி

(கொழும்பு)

"காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வலியும் வேதனையும் அரசுக்குத் தெரியும். கொடூர வேதனையில் துடிக்கும் அந்த உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்." என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று முன்தினம் நீதி கோரி வடக்கு, கிழக்கின் பல்வேறு இடங்களில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

"நீதி அமைச்சர் என்ற ரீதியில் எனது கருத்தை நான் முன்வைத்துள்ளேன்.



தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என மூவினத்திலும் பலர் காணாமல்போயுள்ளனர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

அந்த உறவுகள் வடிக்கும் கண்ணீரை எந்தத் தரப்பும் கொச்சைப்படுத்த முடியாது.

அவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது" என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)


INTAKE NOW ON



BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பிரித்தானிய
உயர் தேசிய டிப்ளோமா
மற்றும் பட்டப்படிப்புக்கள்!

EARLY BIRD DISCOUNTS *Conditions Apply

UGC Recognized

Foundation Courses After O/L ▶ BTEC HNDs After A/L ▶ BSc (Hons) BEng (Hons) LLB (Hons) ▶ MBA | MSc

MANAGEMENT | COMPUTING | APPLIED SCIENCE | LAW
QUANTITY SURVEYING | ENGINEERING

(C-7170)
077 710 2131
077 068 8828
REGISTER NOW
Pearson | BTEC
SOLENT UNIVERSITY SOUTHAMPTON
OXFORD BROOKES UNIVERSITY

021 221 9910 "Building Careers Transforming Lives" NO 16, Point Pedro Road, Jaffna www.bcas.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 'வாலிப கிண்ணம்' உதைபந்தாட்ட போட்டி
# யங்லயன்ஸ் அணி கோல் மழை




இளவாலை வருத்தப்படாத வாலிப சங்கம் தனது 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 பேர் உள்ளடக்கிய "வாலிப கிண்ணம்" மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி கடந்த 29 ஆம் திகதி இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் தேவரையாளி யங்லயன்ஸ் அணியை எதிர்த்து பெரிய விளான் சென். அன்ரனீஸ் அணி மோதியது.

ஆரம்பத்தில் இருந்து விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதல் பாதியாட்டத்தில் அபாரமாக 2 கோலின் மூலம் யங்லயன்ஸ் முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியாட்டதில் போட்டியை முழுமையாக தம்வசப்படுத்திய யங்லயன்ஸ் மேலும் 3 கோல்களை போட முடிவில் யங்லயன்ஸ் அணி 05:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

யங்லயன்ஸ் அணி சார்பாக சிவனாத் 2 கோல்களையும் கௌசிகன், டிலைக்சன், நிலோஜன் தலா ஒவ்வொரு கோலினையும் போட்டனர். போட்டியின் ஆட்ட நாயகனாக யங்லயன்ஸ் அணியின் வீரர் சிவனாத் தெரிவு செய்யப்பட்டார். (4-6)


## குத்துச்சண்டை போட்டி
# ஈழத்தை சேர்ந்த சதுர்த்திகன் ஜேர்மன் வீரரை வீழ்த்தி வெற்றி




ஜேர்மனில் அண்மையில் இடம்பெற்ற குத்துச் சண்டை போட்டியில் ஈழத்தை பூர்வீகமாகவும் சுவிஸ் நாட்டில் வசித்து வருபவருமான சி.சதுர்த்திகன் ஜேர்மன் வீரரை வீழ்த்தி வெற்றியை தனதாக்கிக் கொண்டார்.

சுமார் 130 போட்டியாளர்கள் பங்குபற்றிய இப்போட்டியில் 17 வயதான சதுர்த்திகன் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# உடற்தகுதியை நிரூபிப்பதற்கு வில்லியம்சனுக்கு கால அவகாசம்




உலகக் கிண்ண தொடருக்கான உடற்தகுதியை நிரூபிப்பதற்கு நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சனுக்கு இரண்டு வாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அதன் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் போது, அவரது முழங்காலில் காயம் ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில், அவர் தற்போது, காயத்தில் இருந்து மீண்டு வருவதுடன், நியூசிலாந்து அணியுடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில், உலகக் கிண்ண தொடருக்கான அணியில் இடம்பெறுவதற்கு வில்லியம்சனுக்கு போதிய வாய்ப்புகள் வழங்கப்படும் என்று நியூசிலாந்து பயிற்சியாளர் கேரி ஸ்டெட் தெரிவித்துள்ளார். (4)





வர்ஜனி




ரதிகா




யாதவி





துரியதன்




கிஷான்




வைத்தீஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி இறைச்சியையும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய நேரிடும் -நளின் பெர்னாண்டோ

(கொழும்பு)

கோழி இறைச்சியை 850 ரூபாவிற்கு விற்பனை செய்யாவிட்டால் அதையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய நேரிடும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி 1300 முதல் 1500 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதன் காரணமாக கோழி இறைச்சி கொள்வனவு செய்வதனை நுகர்வோர் குறைத்துக் கொண்டுள்ளனர்.

எனது கணக்கின்படி ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியை 850 ரூபா வரைக்கும் விற்பனை செய்ய முடியும்.

எனவே கோழி இறைச்சி விற்பனையாளர்கள் பிரச்சினையை சுமூகமாக முடிக்க விரும்பாவிட்டால் கோழி இறைச்சியையும் இறக்குமதி செய்ய நேரிடும். நுகர்வோரை அசௌகரியத்திற்கு உள்ளாக்க இடமளிக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சந்தையில் தற்பொழுது ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலை 1350 முதல் 1400 வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பேக்கரிப் பொருட்களின் விலைகளில் மாற்றமில்லை

## வெதுப்பக உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

வெதுப்பக உற்பத்திபொருட்களின் விலைகளில் எதுவிதமான மாற்றங்களும் ஏற்படாது என வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கோதுமை மா இறக்குமதிக்காக விதிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திர முறைமை இரத்து செய்யப்பட்டு ஒரு கிலோகிராம் கோதுமை மாவுக்கான இறக்குமதிக்கான வரி அதிகரிக்கப்பட்டாலும் வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலையில் மாற்றம் ஏற்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோதுமையை சந்தைப்படுத்தும் இரண்டு நிறுவனங்களின் நன்மைக்காக அரசாங்கம் கோதுமை மா இறக்குமதி அனுமதிபத்திர முறைமை அறிமுகப்படுத்தியது. அந்த நிறுவனங்கள் கோதுமை பயிரையே இறக்குமதி செய்தன.

அதன் போது, கோதுமை பயிர் இறக்குமதிக்காக 3 ரூபா வரி அறவிடப்பட்டது. தற்போது அது 6 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

# பாடசாலை நேரத்தை நீடிக்க யோசனை

(கொழும்பு)

பாடசாலை நேரத்தை காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நீடிப்பதற்கு யோசனையொன்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

காலியில் ஊடங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். மேலும்பாடசாலைமாணவர்களை விளையாட்டில் ஈடுபட ஊக்குவிக்கும் நோக்கில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# அடையாள அட்டை இல்லாதவர்கள் அபராதம் செலுத்தியே பெற வேண்டும்

## ஆட்பதிவுத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

40 வயதுக்கு மேற்பட்ட தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் அதனைப் பெறுவதற்காக 2,500 ரூபா அபராதமாகச் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

முன்னதாக தேசிய அடையாள அட்டை பெறாத குற்றத்தை குறிப்பிட்ட காலத்துக்குள் தீர்த்து வைப்பதற்காக இந்த அபராத தொகை விதிக்கப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், உயர்த்தப்பட்ட அபராதத் தொகையைச் செலுத்த முடியாத குறைந்த வருமானம் பெறும் நபர்களிடமிருந்து மட்டும், முன்னர் அறவிடப்படும் அபராதத் தொகையான 250 ரூபாவை வசூலிக்க ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி கையொப்பமிட்ட கடிதம் மூலம் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் இது அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)




## நல்வாழ்வு தரும் நல்லூரான்

வெள்ளமென அலைமோதும் பக்தர் கூட்டம்
வேண்டும் வரம் அருளிடுவான் எங்கள் வேலன்
உள்ளமதில் ஒளிவடிவமாய் நின்ற கந்தன்
ஊரெல்லாம் உவந்து சொல்லும் உன் நாமம்
கள்ளமிலா உள்ளமதில் வாழும் கடம்பன்
கசிந்துருகி வணங்குவோர்க்கு அருளும் குகன்
வள்ளி மீது மையல் கொண்டு அன்று வந்தாய்
வணங்குவோர்க்கு நல்ல வாழ்வு என்றும் தந்தாய்

விஜியகண்ணன்,
யாழ்ப்பாணம்.

## தரணியை ஆளும் தமிழ்க் காவலனே

ஆறுபடைகளில் ஆறானவன்
ஆறுமுகங்களில் ஆளானவன்
சரவணப் பொய்கையில் உருவானவன்
சக்தி வேலேந்திய வடிவேலவன்
பன்னிரு புஜங்களை கொண்டானவன்
பழம்பெரும் அவ்வைக்கு பழம் தந்தானவன்
தந்தைக்கு உபதேசம் செய்தானவன்
தரணியை ஆண்டிடும் தமிழ்க்காவலன்
நல்லையில் வீற்றிருந்து அருள்வானவன்
நம்பினார்க்கு உறவாகி உணர்வாகி குருவானவன்

லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்,
மறவன் புலோ மத்தி.

# இராசிபலன்

01.09.2023
ஆவணி 15, வெள்ளிக்கிழமை
துதியை பின்னிரவு 3.48 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 6.55 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

சந்திராஷ்டமம் - ஆயில்யம், மகம்

வளவன்




வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் உதவ முன்வருவர், தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.




பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




தொழில் வளர்ச்சி கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவிர்கள், பேச்சைக் குறைத்து செயற்பாடுகளில் வேகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




உறவினர்கள் நண்பர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பயணங்களின் போது நிதானம் தேவை.




சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




தலைமைப் பதவிகள் உங்களை நாடி வரலாம், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், சுப செய்திகள் நாடி வரும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.




பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி கூடும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




சுபகாரியச் செலவுளில் தாராளம் காட்டுவீர்கள், நண்பர்களால் நன்மைகள் நடைபெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு.




வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், கற்பனைகள் அதிகமாகும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது.

உன் இன்பம், துன்பம் இவைகளைப்பற்றி பிறரிடம் கூறாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச கண்புரை சத்திர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் கண்புரை சத்திர சிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் நாளை சனிக் கிழமை காலை 9.00 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதி காரி பணிமனைக்குரிய யூபிலி கிளினிக் நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

அதேபோன்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற் கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாமும் அன்றைய தினம் காலை 9 மணி தொடக் கம் நல்லூர் சுகாதார வைத்திய அதி காரி பணிமனையிலும் நடை பெறவுள் ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திர சிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயா ளர்களுக்கான சத்திர சிகிச்சை மேற் கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப் படும்.

கண்புரைசத்திர சிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலை களில் இருந்து யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அழைத்துவருவதற்கும், சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா வைத்திய சாலையில் இருந்து அவர்களது பிரதே சத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இல வசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப் பாண பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ் வரன் தெரிவித்துள்ளார். (நி-4-6)

# சட்டவிரோத மது விற்பனை ஒருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபா னங்களை உடமையில் வைத்தி ருந்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவு பொலி ஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டதுடன் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் சந்தேக நபர் ஒப்ப டைக்கப்பட்டார்.

போயா தினமான நேற்று முந்தி னம் மதுபானங்களை சட்டவிரோத மாக விற்பனை செய்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 25 போத்தல் மதுபானம் கைப்பற் றப்பட்டுள்ளன. (4-6-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 550 | 600 |
| தக்காளி | 200 | 150 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 180 | 200 | 250 |
| கரட் | 350 | 350 | 400 | 500 |
| பூசணி | 80 | 100 | 100 | 100 |
| புடோல் | 80 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 80 | 120 | 80 | 250 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 140 | 200 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 | 250 |
| பீற்றூட் | 120 | 120 | 120 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 280 | 200 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 140 | 180 | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 120 |
| தேசிக்காய் | 700 | 600 | 800 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 380 | 350 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 60 | 120 |

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : மானிப்பாய் கிராம உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : அண்ணாமலை தவராசா
முகவரி : ஆதன இல 04 வீதி : பாடசாலை முன் வீதி, வட்டாரம் :15

வட்டாரம் 15 பாடசாலை முன் வீதி, ஆதன இலக்கம் 04 இல் அமைந்துள்ள, உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று "நாவிதன் தோட்டம்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 1 குளி 11.64 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் சண்டிலிப்பாய் மத்தி சண்டிலிப்பாயைச் சேர்ந்த நாகமுத்து துரைச்சாமி மற்றும் நாகமுத்து சற்குணராசா ஆகியவர்களால் "இவ் ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே" என பிரசித்த நொத்தாரிசு இ.த. அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 5012ஆம் இலக்க 28.03.2015 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இ.த.அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 5305 ஆம் இலக்க 30.09.2015 ஆம் திகதிய உறுதி மூலம் நாகமுத்து நற்குணராசா என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். இவ் ஆதனத்தை நாகமுத்து நற்குணராசா பிரசித்த நொத்தாரிசு இ.த.அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 6330 ஆம் இலக்க 21.06.2017 ஆம் திகதிய உறுதி மூலம் அண்ணாமலை தவராசா என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் வரையப்பட்ட 15/16 ஆம் இலக்க 12.03.2015 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் நாவிதன் தோட்டம் நிலப்பரப்பு 01 குளி 11.64 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு: செல்லையா நித்தியானந்தனின் ஆதனம்
கிழக்கு: துரைச்சாமி பகிரதனும் பெண் அகல்யாவினதும் ஆதனம்
தெற்கு: பாதை
மேற்கு: நாகமுத்து செல்வராஜாவின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை அண்ணாமலை தவராசா என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரி விப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங் களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ, ஆட்சே பனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.** (16896)

# மணவாளக்கோல உற்சவம்

(யாழ்ப்பாணம்)

துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன் மணி சக்தி சமேத காளி காம்பாள் தேவஸ்தான மண வாளக்கோல உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்ப மாகும்.

1008 சங்காபிஷேகத்து டன் விஷேட பூசைகள் நடை பெற்று மாலை 7 மணிக்கு மூலஸ்தான பூசையுடன் நூதன வசந்த மண்ட பத்தில் விசேட பூசைகள் நடைபெற்று காளிகாம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வருவார். (4-6-60)

# மாகாணமட்ட நீச்சல்போட்டி 53 பதக்கங்கள் பெற்றது யாழ்.இந்துக் கல்லூரி



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரி கடந்த 28,29 ஆம் திகதிகளில் நடை பெற்ற மாகாண மட்ட நீச்சல்போட் டியில் 23 தங்கம், 15 வெள்ளி, 15 வெண்கலம் என மொத்தமாக 53 பதக்கங்களைப்பெற்று சாதனை படைத்துள்ளனர். வடக்கு மாகா ணத்தில் ஒரு பாடசாலை பெற் றுக்கொண்ட அதிகூடிய பதக் கங்கள் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6-33)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன் றத்தினால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப் படும் தெய்வீக இசைஅரங்கு நிகழ்வில் நாளை 2 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு இணு வில் தீபம் இசைக் கல்லூரி னரால் குழு இசை நிகழ்வு நடை பெறவுள்ளது.

இதன்போது வயலின்-இ.நிரோஜன், மிருதங்கம்-வ.ரமணசர்மா, கஞ்சிரா-ர.லய சர்மா, கடம்-ந.ஜெனகன், நெறி யாள்ளை-எம.எஸ்.பிரதீபன் ஆகியோர் நிகழ்த்தவுள்ள னர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு திருப்புகழ் இசை அமிர்தம் இசையரங்கு நிகழ்வு நடை பெறவுள்ளது.

இதன்போது பாட்டு-எம்.எஸ். பிரதீபன், வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-ம.லோகேந்திரன், கஞ்சிரா-ர.லயசர்மா, கடம்-ந.ஜெனகன், கீபோட்-என்.நிதுசன் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய், சேய் நலன் மேம்பாட்டில்

# தெற்காசிய நாடுகளிலே இலங்கையே சிறந்த நிலை

(சாவகச்சேரி)

**தாய்-சேய் நலன் மேம்பாட்டில் தெற்காசியாவிலேயே இலங்கை சிறந்த நிலையில் காணப்படுவதாக யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் கொடிகாமத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், தாய் மற்றும் சிசுவுடைய ஆரோக்கியத்தில் தான் ஓர் நாட்டினுடைய ஆரோக்கியம் தங்கியுள்ளது. அந்தவகையில் தாய்-சேய் மரண விகிதத்தை வைத்தே ஒரு நாட்டினுடைய, மாவட்டத்தினுடைய ஆரோக்கிய நிலையை கணிக்க முடியும். தாய்-சேய் நலன் மிக மிக முக்கியமானது. அந்த விடயத்தைப் பொறுத்தவரையில் எமது நாட்டில் தாய்-சேய் மரண விகிதம் தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிக குறைவடைந்துள்ளது. தாய்-சேய் நலனில் தெற்காசியாவிலேயே இலங்கை சிறந்த நிலையில் காணப்படுகிறது.

தாய்-சேய் நலன் விடயத்தில் எமது நாடு சிறந்து விளங்கக் காரணம் எமது நாட்டில் உள்ள நோய்த் தடுப்பு பொறிமுறை. எமது நாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர் என சிறந்த நோய்த் தடுப்புக் கட்டமைப்புக் காணப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பை வைத்து நாட்டில் பல தொற்று நோய்களை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம். ஒரு காலத்தில் மலேரியா பெரிய ஒரு உயிர் கொல்லி தொற்று நோயாக இருந்தது. அது தற்போது கட்டுக்குள் உள்ளது. அத்துடன் செங்கமாரி, டெங்கு போன்ற பல தொற்று நோய்கள் முழுக் கட்டுப்பாட்டிற்குள் உள்ளன.

பல நோய்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர உதவியாக இருந்தது எமது நாட்டில் காணப்படுகின்ற சுகாதார கட்டமைப்பு. கடந்த வருடங்களில் உலகளாவிய ரீதியாக பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் தொற்றினை எமது சுகாதார துறையால் கட்டுப்படுத்த முடிந்தது.

எமது நாட்டில் உள்ள நோய்த் தடுப்பு சுகாதாரக் கட்டமைப்பினை ஸ்தாபித்தவர் செல்லப்பா என்ற ஓர் தமிழர். இலங்கையின் முதலாவது சுகாதாரர வைத்திய அதிகாரியும் அவரே. அவர் களுத்துறையில் முதன் முதலாக இந்த சுகாதார கட்டமைப்பை உருவாக்கினார்.

காலப் போக்கில் அது நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. இந்த சிறந்த கட்டமைப்பு தான் தாய்-சேய் மரண விகிதம் குறைவாக இருக்க பிரதான காரணம் என மேலும் அவர் தெரிவித்தார். (4-6-30)

# நாகர்கோவில் வடக்கு முருகையா ஆலய மஹோற்சவம்

(கரணவாய்)

நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியதுடன் தொடர்ந்து 16 நாட்கள் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாம்பழ உற்சவமும் 6 ஆம் திகதி புதன்கிழமை தெற்ப உற்சவமும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்ச உற்சவமும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டை உற்சவமும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பற உற்சவமும் 13 ஆம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (4-6-60)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தீர்த்த திருவிழா நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படம்: சிவசாந்தன்.மகாலிங்கம்)

# யாழ்.தேர்தல்கள் அலுவலகத்தின் புதிய கட்டட திறப்பு விழா

(அராலி)

யாழ்ப்பாணம்பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளைமறுதினம் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அலுவலர்களின் பங்கேற்புடன் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரால் இந்த அலுவலகமானது திறந்து வைக்கப்படவுள்ளது. (4-6-104)

## தென்னைச் செய்கையாளர்களுக்கு!

# மழையின்மையால் தென்னையில் வறட்சியின் தாக்கம்



ஜெ.சத்தியேந்திரன்
ஓய்வுநிலை உதவிப் பிராந்திய முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச்செய்கை சபை,
யாழ்ப்பாணம்

சர்வதேச தென்னை தினம் நாளை இடம்பெறவுள்ள நிலையில் இந்தச் செய்தி மூலம் தேங்காய் உற்பத்தியினை கூட்டவும் வழிகாட்டலாய் அமைகின்றது. தேங்காய் உற்பத்தியினை கூட்டுவதற்கு கடந்த காலங்களில் நோய், பீடைகள் போன்ற சவால்களுக்கு மத்தியில் பல்வேறு உத்திகளை மேற்கொண்டு இருப்பீர்கள் ஆனால், இந்த வருடம் தென்னைச் செய்கையில் வறட்சியின் தாக்கத்தினை எதிர்கொண்டு பல்வேறு வழிகள் மூலம் தேங்காய் உற்பத்தியினை கூட்ட முடியும்.

வறட்சி நிலை நீடித்தால், தென்னை வேரின் வெளிக்கலங்களும் உறிஞ்சும் வேர்ப்பகுதியின் கலச்சுவர்களும் தடிப்படைந்து நீர் உட்செல்ல முடியாமல் போகும். வேர்கள் உறிஞ்சல் தொழிலினை மேற்கொள்ளாவிடின், தென்னை மரம் பாதிக்கப்படும்.

மண்ணில் நீர பற்றாக் குறை ஏற்படும் போது வறட்சியின் தாக்கம் முதலில் தென்னங்கன்றுகளிலும் பின்னர் இளம் தென்னைகளிலும் படிப்படியாக முதிர் தென்னை மரங்களிலும் காணப்படும். வறட்சி தொடர்ந்து நீடித்தால் தண்டின் வளர்ச்சிப் பிரதேசம் பாதிக்கப்படும்.

• தொடராக 4,5 மாதங்கள் வரை வறட்சி நீடித்திருப்பின் தென்னைச் செய்கை பாரிய பாதிப்பிற்குட்படும். முக்கியமாக ஓலைகள் ஒழுங்காக வெளிவராது. ஓலைகள் மஞ்சளாகி இறந்து விடும்.

• தென்னையில் 20 ஓலைகளுக்கு குறைவாக இருந்தால் திருப்தியான விளைச்சல்" இருக்காது.

• மகரந்தச் சேர்க்கைக்கு ஈரலிப்பு முக்கியம்.

• வறண்ட பிரதேசத்தில் முதிர்வடையாத தேங்காய்கள், குலைகள், குரும்பட்டிகள் உதிர்வடைய ஆரம்பிக்கும். இதில் குலைகள் மட்டும் குறைவது மட்டுமல்லாமல் அதன் பருமனும் சிறியதாகும்.



• மண் ஈரலிப்பு பாதுகாப்பு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தோட்டத்தில் உயர் விளைச்சலாக 10, 000 இலிருந்து 15,000 தேங்காய்கள் வரை ஒரு ஹெக்டேயருக்கும் 4000-6000 தேங்காய்கள் வரை ஒரு ஏக்கருக்கும் எடுக்க முடியும்.

• கடும் வறட்சியின் போது வறட்சித் தாக்கத்தினைப் பாதுகாக்க மேலும் சில வழிகளை பின்பற்றி விளைச்சலை கூட்ட முடியும்.

**1)** தென்னங்காணியில் மழை நீரைப் பாதுகாத்தல் செயன்முறை உதாரணமாக இருக்கும் துரவுகளை சீர் செய்தல் அல்லது புதிய துரவு அமைத்தல்.

**2)** நீர்ப்பாசனத்தினை திட்டமிட்டு ஒழுங்காக செய்தல்.

உதாரணமாக

பேசின் அல்லது வட்டப் பாத்தி முறை. (Basin& furrow Irrigation)

சொட்டு நீர்ப்பாசன முறை (Drip Irrigation)

குழாய் நீர்ப்பாசன முறை (pipe Irrigation)

குடநீர்ப்பாசன முறை (தென்னங்கன்றுகளுக்கு) ( Pitcher Irrigation)

தூவல் நீர்ப்பாசன முறை ( Sprinkler Irrigation)

சிறிய துரவுகள் நீர்ப்பாசன முறை- (Small water Holes Irrigation)

**3)** மண்ணீர்ப்பாதுகாப் பிற்கான பத்திரக் கலவை இடுதல் , பசளை வட்டத்தின் பத்திரக் கலவையால் (காய்ந்த தென்னை) மூடுதல். இதனால் மண் வெப்பநிலையினைக் குறைத்தல் மேலும், நீர ஆவியாதலினைத் தடுக்கின்றது.

**4)** வரண்ட சூழ்நிலையில் தென்னங்கன்றுகள் நடுவதனை தவிர்த்தல் நல்லது அப்படி நடுவதாயின் நீர்ப்பாசனம் செய்து நட்ட கன்றுகளுக்கு அருகில் இருபுறமும் பனை ஓலை அல்லது தென்னோலையினால் நிமிர்த்தி நட்டு மறைப்பு செய்தல் வேண்டும். அத்துடன் கரு வண்டுத் தாக்கத்தினையும் அவதானிக்க வேண்டும்.

**5)** அசேதனப் பசளைகள் வரண்ட சூழ்நிலையில் போட வேண்டாம்.

**6)** உழுதல் அல்லது தீ வைத்தலைத் தவிர்க்கவும்.

**7)** மூடுபயிர்கள் உண்டாக்கி பராமரிக்கலாம்.

**8)** கால்நடைகள் மேய்வதனைக் கட்டுப்படுத்தவும்.

மேலும் மண்ணீர்ப் பாதுகாப்பு முறைகளாக,3 முறைகளில் பொச்சு மட்டைக் குழிகளை அமைக்கலாம்.(இரண்டு தென்னைகளுக்கு இடையில்)

எனவே, மேற்கூறப்பட்ட வழிமுறைகளைக் கையாண்டு வரட்சியின் சவால்களை எதிர்கொண்டு தேங்காய் உற்பத்தியினை பாதுகாத்து கூட்ட முடியும்.

**இலவச ஆலோசனைக்கு**
**077 5056 263**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 271





பழுவேட்டரையரின் பனை இலச்சினை அவர்களிடம் இருந்தது. அப்படியும் நான் என் மகனைப் போகச் சொல்லியிருக்கமாட்டேன். ஆனால் என் மருமகள் மிகப் பணத்தாசை பிடித்தவள். பை நிறையப் பணம் கொடுப்பதாக அவர்கள் சொன்னதைக் கேட்டுவிட்டுப் புருஷனைப் போக வேண்டும் என்று வற்புறுத்தினாள்."

"இது என்ன ஐயா, வேடிக்கை? வீட்டில் உலக அநுபவம் இல்லாத ஒரு சிறு பெண் சொன்னால், அதைத்தான் உங்கள் மகன் கேட்க வேண்டுமா?" என்றான் வந்தியத்தேவன். பிறகு சிறிது தயக்கத்துடன், "மன்னித்துக் கொள்ளுங்கள், அது தங்கள் குடும்ப விடயம்!" என்றான்.

"அப்பனே! நீ கேட்பதில் தவறு ஒன்றும் இல்லை. என் குடும்பத்திற்குச் சாபக்கேடு ஒன்று உண்டு. என் மகன்" என்று தயங்கினார்.

வந்தியத்தேவன் அப்போது சேந்தன் அமுதன் இக்குடும்பத்தைப் பற்றிக் கூறியது நினைவுக்கு வந்தது. "தங்கள் மகனால் பேச முடியாதா?" என்றான். "ஆம் உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றார் பெரியவர்.

சேந்தன் அமுதனையும், அவன் தாயாரையும், அவர்கள் வீட்டில் தான் தங்கியிருந்ததையும் பற்றி வந்தியத்தேவன் அவரிடம் கூறினான்.

"ஆகா! அந்த ஆள் நீதானா? உன்னைப் பற்றிச் செய்தி இங்கே முன்னமே வந்துவிட்டது. உன்னை நாடெங்கும் தேடுகிறார்களாமே?"

"இருக்கலாம் அதைப் பற்றி எனக்குத் தெரியாது".

"நீ ஏன் இலங்கைக்கு அவசரமாகப் போக விரும்புகிறாய் என்று இப்போது எனக்குத் தெரிகிறது."

"பெரியவரே! தாங்கள் நினைப்பது சரியல்ல. என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டும் நான் இலங்கைக்குப் போகவில்லை. அங்கேயுள்ள ஒருவருக்கு மிக முக்கியமான ஓலை ஒன்று கொண்டு போகிறேன். தாங்கள் வேண்டுமானால் அதைப் பார்க்கலாம்."

"தேவையில்லை. இளைய பிராட்டி உன்னைப் பற்றி எழுதியிருப்பதே எனக்குப் போதும். ஆனால் இச்சமயம் நீ கேட்கும் உதவி என்னால் செய்ய முடியவில்லையே!"

"இன்னொரு படகு இருப்பதாகச் சொன்னீர்களே?"

"படகு இருக்கிறது. தள்ளுவதற்கு ஆள் இல்லை. நீயும் உன்னுடைய சிநேகிதனும் தள்ளிக்கொண்டு போவதாயிருந்தால் தருகிறேன்."

"எங்கள் இருவருக்கும் படகு ஓட்டத் தெரியாது. எனக்குத் தண்ணீர் என்றாலே கொஞ்சம் பயம். அதிலும் கடல் என்றால்."

"படகு ஓட்டத் தெரிந்தாலும் அநுபவம் இல்லாதவர்கள் கடலில் படகு ஓட்ட முடியாது. கடலில் கொஞ்ச தூரம் போய்விட்டால் கரை மறைந்து விடும். அப்புறம் திசை தெரியாமல் திண்டாட வேண்டி வரும்."

"என்னுடன் வந்தவனை நான் அழைத்துப் போவதற்கும் இல்லை. அவனை மூலிகை சேகரிப்பதற்காக இங்கே விட்டுப் போகவேண்டும். ஏதாவது ஒரு வழி சொல்லி நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்."

"ஒரு வழி இருக்கிறது. அது எளிதில் நடக்கக் கூடியதன்று. நீயும் முயற்சி செய்து பார்! அதிர்ஷ்டம் உன் பக்கம் இருந்தால்." "நான் என்ன செய்ய வேண்டும்? பெரியவரே, சொன்னால் கட்டாயம் செய்கிறேன்" என்றான் வந்தியத் தேவன்.

"இந்தப் பகுதியிலேயே பூங்குழலியைப் போல் சாமர்த்தியமாகப் படகு தள்ளத் தெரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை. இலங்கைக்கு எத்தனையோ தடவை போய் வந்திருக்கிறாள். அவளிடம் நான் சொல்லுகிறேன் நீயும் கேட்டுப்பார்!"

"இப்போதே கூப்பிடுங்களேன் கேட்டுப் பார்க்கலாம்" "வேண்டாம் மிக்க பிடிவாதக்காரி. இப்போது உடனே கேட்டு 'முடியாது' என்று சொல்லிவிட்டால், அப்புறம் அவளுடைய மனத்தை மாற்ற முடியாது.

(தொடரும்)




## கூடா நட்பு கேடாய் முடியும்



அழகான இளைஞன் ஒருவன் அந்த கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவன் அழகில் அந்த கிராமத்தில் இருந்த பெண்களுக்கு அப்படி ஒரு இஷ்டம் அவனது பெயர் ரிஷி. பெயருக்கு பொருத்தமான வாட்டசாட்டமான இளைஞன் அவன்.

ரிஷியை திருமணம் செய்து கொள்ள பல பெண்கள் விருப்பப்பட்டாலும் அவன் ஒத்துக் கொள்ளவில்லை. அந்த கிராமத்தில் ஒரு பூனை அவன் வீடு வழியாக கடந்து சென்றது. அப்போது அது ரிஷியை பார்த்து என்ன இவன் இவ்வளவு அழகாக இருக்கிறான். இவனை போல ஒருத்தனை நான் எப்படி கல்யாணம் பண்ண முடியும் என யோசித்தது. நானோ பூனை, இவன் மனிதன் ஆச்சே என்ன பண்ணலாம் என யோசிக்க ஆரம்பித்தது. அந்த கிராமத்தில் ஒரு சூனியக்காரி வீடு இருப்பதாய் தெரிந்து கொண்ட பூனை அங்கு சென்றது. சூனியக்காரியிடம் பூனை என்னை எப்படியாவது ஒரு அழகான பெண்ணாக மாற்றுங்கள் என மன்றாடியது. சூனியக்காரி, நீ அவனுக்கு சரியானவள் இல்லை என்றார். பூனை விடுவதாக இல்லை என்ன செய்தால் என்னால் ரிஷியை திருமணம் செய்து கொள்ள முடியும் என்றது.

அப்போது சூனியக்காரி நீ பூனையின் குணாதிசயத்தை மாற்ற வேண்டும் என்றார். பூனையும் கண்டிப்பாக மாற்றி [illegible]கிறேன். எனக்கு ரிஷி வேண்டும் என பிடிவாதமாக சொன்னது. சூனியக்காரி ஒரு அழகிய பெண்ணாக பூனையை மாற்றினார். ரிஷி பெண்ணாக மாறிய பூனையை திருமணம் செய்து கொண்டான். இவர்களது வாழ்க்கை மிகவும் சந்தோசமாக சென்று கொண்டிருந்தது. பூனை நிஜமாக அதன் குணாதிசயத்தை மாற்றி விட்டதா என சூனியக்காரி பார்க்க நினைத்தாள். பூனை இருக் [illegible] சூனியக்காரி. அந்த மனம் அந்த பெண்ணை வெகுவாக இழுத்து இருந்தாலும் அடக்கி கொண்டு தான் ஒரு பூனை அல்ல என அமைதி ஆனாள்.

இதை பார்த்த சூனியக்காரிக்கு ஆச்சர்யம் ஒருவேளை பெண்ணாகவே மாறிவிட்டதா பூனை என எண்ணினாள். சில நாட்கள் சென்றது. ரிஷி அந்த பெண்ணோடு இன்னும் சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருந்தான். இப்போது சூனியக்காரி அவர்களை பார்த்து பொறாமை கொண்டாள்.

ஒரு பூனைக்கு இப்படி ஒரு வாழ்க்கையா? விட கூடாது என இந்த முறை அந்த பெண் இருக்கும் பக்கங்களில் சில மீன் துண்டுகளை போட்டு வைத்தால் சூனியக்காரி. அந்த பெண்ணுக்கு மீன் வாசனை மூக்கை துளைத்தது.

அதை பச்சையாக சாப்பிட்டு பழக்க பட்ட அந்த பெண்ணுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ரிஷி அந்த சமயம் பார்த்து வீட்டுக்குள் நுழைந்தான்.

சட்டென நிதானம் அடைந்த அந்த பெண் மீனை சமைத்து ரிஷிக்கு அழகான விருந்து வைத்தாள். தோல்வியடைந்த சூனியக்காரி இன்னும் கோபமாக அங்கிருந்து கிளம்பினாள்.

எப்படியாவது இவர்களை பிரிக்க வேண்டும் என எண்ணி யோசித்து கொண்டிருந்த சூனியக்காரிக்கு ஒரு யோசனை வந்தது. உடனடியாக ரிஷியின் வீட்டுக்கு அருகில் சென்றாள். அங்கு இருவரும் பேசி சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த பெண்ணின் தலையில் ஏதோ விழுவது போன்று உணர்ந்து திடுக்கென எழுந்தாள். ஒரு குட்டி எலி அவள் மீது விழுந்ததை உறுதி செய்த அந்த பெண் சட்டென அதை பிடித்து கடித்து சாப்பிட்டாள்.

அவள் வாயெல்லாம் ரத்தம் சொட்ட சொட்ட பார்த்த ரிஷிக்கு பயங்கரமான அதிர்ச்சி. சூனியக்காரியை நம்பி இந்த செயலை செய்து இறுதியில் அவளே தன்னை பழிவாங்கி விட்டாளே என பூனை வருத்தமானது. கூடா நட்பு கேடாய் முடியும் என்பதற்கு சான்று இது தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஏழை மக்களுக்கு உதவுகின்ற அறப்பணியை ஆலயங்கள் செய்ய வேண்டும்

ஆலயங்கள் அறப்பணிகளின் நிலைகளன்கள். ஆலய நிர்வாகிகள் அறங்காவலர்கள்.

ஆக, அறப்பணி ஆற்றுவதன் காரணமாகவே ஆலய பரிபாலனத்தை அறங்காவலர்கள் என்று நம் முன்னோர்கள் வரையறை செய்தனர்.

எனினும் சமகாலத்தில் ஆலயங்கள் அறப்பணி செய்கின்றனவா? என்று கேட்கும்போது அறவே இல்லை என்று நிராகரித்துவிடமுடியாது.

அதிலும் சில ஆலயங்கள் அறப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியிருப்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

தவிர, பெரும்பாலான ஆலயங்கள் அன்னதானப் பணியை செம்மையாகச் செய்கின்றன.

குறிப்பாக மஹோற்சவ காலங்கள், விசேட உற்சவங்கள் என்றவாறு அன்னதானம் இடம்பெறுகின்றது.

இன்னும் சில ஆலயங்களில் நித்திய அன்னதானம் இடம்பெறுகின்றமை இங்கு மனங்கொள்ளத்தக்கது.

ஒவ்வொரு நாளும் அடியவர்களுக்கு அமுதளிப்பதென்பது சாதாரண விடயமன்று.

இக் கைங்கரியத்தை செய்வதற்கான அர்ப்பணிப்பு உன்னதமானது.

இதேபோல சில ஆலயங்கள் கல்விப் பணிகளிலும் ஆதரவற்ற பிள்ளைகளை பராமரிக்கின்ற பெரும் பணியிலும் ஈடுபடுகின்றன.

இருந்தும் மேற்கூறப்பட்ட பணிகளில் ஈடுபடுகின்ற ஆலயங்களை விரல் விட்டுக் கூற முடியும்.

மாறாக, பெரும்பாலான ஆலயங்கள் மிகப் பெரும் செலவில் திருவிழாக்களைச் செய்து முடிக்கின்றன.

அதிலும் வெளிநாட்டில் இருக்கின்ற நம் புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் நடக்கின்ற திருவிழாக்களைச் சொல்லவே தேவையில்லை.

அந்தளவுக்கு பணம் இறைக்கப்படுகிறது.

ஆன்மீகப் பணியில் ஈடுபடுகின்ற ஆலயங்களில் இவ்வாறு பணம் கண்டபாட்டில் செலவிடப்படுவதென்பது எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாத விடயம்.

அதிலும் சுவாமி வீதிவலம் வரும்போது வாணவேடிக்கைகளுக்காக செலவிடப்படுகின்ற தொகையை நினைக்கும்போது, இந்தப் பணத்தை ஏழைப் பிள்ளைகளின் கல்விக்காகப் பயன்படுத்தலாமே என்று எண்ணத் தோன்றும்.

இங்குதான் ஆலயங்கள் அறப்பணிகளில் ஈடுபட வேண்டும் என்ற சிந்தனை ஏற்படுகிறது.

அதாவது, மஹோற்சவங்களை மிக எளிமையாக, வழிபாட்டுக்கும் பக்திக்கும் முதனிலை கொடுப்பதுடன், ஆலயங்களை நம்பி கருமமாற்றுகின்றவர்களின் பணிகள் பாதிக்கப்படாமல் அவர்களின் ஜீவனோபாயத்துக்கு உதவும் அதேநேரம்; தேவையற்ற – ஆடம்பரமான – மிக உயர்ந்த செலவை உடைய நிகழ்வுகளைத் தவிர்த்து ஆலயம் அமைந்துள்ள இடங்களில் – சூழலில் வாழுகின்ற ஏழை மக்களின் வாழ்வியலுக்காக மீதப்படுத்தப்பட்ட நிதியைச் செலவிடும்போது இறைவன் இன்புறுவான். மக்கள் மனம் மகிழ்வர்.

ஆக, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற உயர்ந்த தத்துவத்தை ஆலயங்கள் பின்பற்றி ஏழை மக்களுக்கு உதவ வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# நாட்டில் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக மகரகம தேசிய புற்றுநோய் நிறுவகத்தின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய புற்றுநோய் நிறுவனத்திற்கு தினமும் சுமார் 36 புதிய புற்றுநோயாளிகள் பதிவாகி வருவதாக அவர் கூறினார்.

அந்த நிறுவனத்தில் மட்டும் பதிவாகும் புதிய புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை மாதாந்தம் 1,000ஐத் தாண்டியுள்ளது.

மேலும்தற்போதுதேசிய புற்றுநோய் நிறுவனத்தில். சுமார் 1,000 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும், நாளாந்த அடிப்படையில் சுமார் 2,000 நோயாளிகள் கிளினிக்குகளில் சிகிச்சை பெறுவதாகவும் டாக்டர் அருண ஜயசேகர மேலும் தெரிவித்தார்.

இந்த எண்ணிக்கையிலான நோயாளர்களுக்கு மேலதிகமாக, நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் உள்ள புற்றுநோய் பிரிவுகளில் புதிய நோயாளிகளும் பதிவாகி சிகிச்சை பெறுகின்றனர்.

தவறான உணவுப்பழக்கவழக்கங்கள் புற்றுநோயை ஏற்படுத்துவதாக டாக்டர் அருண ஜயசேகர சுட்டிக் காட்டினார். (ம-7,9)

## அமெரிக்க செனட்டர் - ரணில் சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்க செனட் சபை உறுப்பினர் கிறிஸ் வென் ஹொலன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். இலங்கைக்குவிஜயம்மேற்கொண்டுள்ள அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கிறிஸ்வென் ஹொலன் நேற்று முன்தினம் ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டனர். (நி-5)

## மசகு எண்ணெயின்-விலை அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதன்படி, டபிள்யூ. டி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 81.63 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன், பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 85.86 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அதேநேரம் இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலையும், அதிகரிப்பை பதிவு செய்து 2.79 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி-5)

## சாவகச்சேரி பிரதேசத்தில் பொலிஸார் விசேட சோதனை

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக சாவகச்சேரி பிரதேசத்தில் அதிகரித்துக் காணப்படுகின்ற திருட்டுச் சம்பவங்களை தடுக்கும் முகமாக சாவகச்சேரிப் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சில இடங்களில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியான திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்தநிலையிலேயே பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல், மட்டுவில், நுணாவில்ஆகிய கிராமங்களில்விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(4-6-30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில்** அரசடி மருதடி-ஆசிரியர் வீதி சந்தி, டச்சு வீதி-கண்டுவில், பெருங்குளம் சந்தி-சாவகச்சேரி ஆகிய இடங்களிலும் **வவுனிய பிரதேசத்தில்** பூவரசங்குளம், சாளம்பைக்குளம், சாளம்பைக்குளம் வீட்டுத்திட்டம், சோபாலா புளியங்குளம், தாலிக்குளம் மலையாபருத்திக்குள்ம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வவுனியா வளாகம், சாளம்பை புதிய வீட்டுத்திட்டம், சாளம்பைக்குளம் பல்கலைக்கழக வளாகம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ்தொழிற்சாலை, பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ராஹவுஸ், தலைமன்னார், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு, சென்.லார்ட்ஸ் ஐஸ்தொழிற்சாலை, பேசாலை ஐஸ்தொழிற்சாலை, Grotto of lady lourds church பேசாலை, கட்டுக்காரன் குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியம் குடியிருப்பு, குருசுப்பாடு கடற்படை முகாம், படப்பாடி நீர்வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார் கப்பல் வீடமைப்புத்திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளுக் குடியிருப்பு தும்புத் தொழிற்சாலை, துள்ளுக் குடியிருப்புத் திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் மென்பொருள் இளங்கலை மாணி 2023/2024 கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 22.09.2023 க்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021222 3374) தொடர்பு கொள்ளுமாறு மேலும் கேட்டுக் கொண்டுள்ளார் (4)

• • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் முகாமைத்துவ கற்கைநெறிகள் கணக்கீடு மற்றும் நிதியியல் முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம் 2023/2024 கற்கைநெறிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 13.09.2023 க்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021 222 3374) தொடர்பு கொள்ளமாறு மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (4)

• • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் தமிழ் மற்றும் தமிழ் மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி 2023/2024 கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் எதிர்வரும் 15.09.2023 இற்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021222 3374) தொடர்பு கொள்ளுமாறு மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (4)

## தெய்வீக திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டத்தொடர் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.15 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன்சுவாமிகள் திருமுன்னிலையில் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய சிவஸ்ரீ பாலகணேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக் கழக இந்துக் கற்கைகள்பீட பீடாதிபதி சிவஸ்ரீ எஸ். பத்மநாபசர்மா, சிறப்பு அதிதியாக யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் வரதராஜ சர்மா ஸ்ரீகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

**21**

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இவற்றில் சிலவற்றினை பெயர் குறிப்பிடுவோமானால் செப்டம்பர் 2020இல் உலக வங்கி தொழில் வாய்ப்பினைப் பாதுகாத்தல் உள்ளிட்ட கொவிட்-19 நிவாரண செயற்பர்டுகளுக்காக 184.6 மில்லியன் அமெரிக்க டொல்ர்களை இலங்கைக்காக ஒதுக்கியிருந்தது.

யூன் 2020இல் இலங்கை தேசத்தின் கொவிட்-19 நிவாரண செயற்பாடுகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாக வழங்கியிருந்தது. இதற்கு மேலதிகமாக மார்ச் 2020இல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இட்டுகம (Itukama) என்ற இலங்கைக்கான கொவிட்-19 நிவாரண நிதியம் ஒன்றும் தாபிக்கப்பட்டது. இது மாதாந்தம் சராசரியாக 7 மில்லியன் பொதுமக்கள் நன்கொடையினை ஏப்ரல் 2021 வரை பெற்றுக்கொண்டது.

இந்த நிதியத்துக்கான பங்களிப்புக்கள் தன்னார்வத்தின் அடிப்படையில் காணப்பட்டதோடு இவற்றுக்கான நிதிகள் பெரும்பாலும் பொதுமக்கள், வெளிநாட்டவர்கள் மற்றும் சில உள்ளூர் நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்றன.

இந்த நடவடிக்கைகளானவை இலங்கை அரசு தொடர்பான சில முக்கிய விடயங்களை எடுத்துக்காட்டுகின்றன. அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் வேலையின்மை வீதங்களுடன் ஒப்பிடுகையில் நிவாரண உதவியாக வழங்கப்பட்ட 5,000 ரூபாய் கொடுப்பனவு என்பது போதாத தொரு தொகையாகும். நாடு எதிர்கொண்டு வரும் பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையின்மையைக் கருத்திற்கொண்டு, ஒன்றுமில்லாமல் இருப்பதனை விட ஏதாவது சிறிதேனும் கிடைப்பது சிறந்தது என ஒருவர் வாதிடலாம்.

எனினும் பேரினப் பொருளாதாரத் தோற்றம் இருண்டதாக இருக்கின்றதொரு நிலையில் மே 2021இல் 3.6 பில்லியன் செலவில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான ஆயத்தங்களை அரசாங்கம் மேற்கொண்டது. அமைச்சர்களுக்கான சொகுசு வாகன இறக்குமதியானது அவசர கால நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் குறைந்தளவான வசதிகளை வழங்கும் ஒரு நடவடிக்கை அது எனவும் குறிப்பிட்டிருந்தது.

இலங்கை மத்திய வங்கி இந்த நகர்வு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றதொரு அறிவிப்பினை வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து பொதுமக்களின் பெரும் எதிர்ப்பிற்கு மத்தியில் அரசாங்கம் அத்தீர்மானத்தைக் கைவிட வேண்டியேற்பட்டது. ஜனதா விமுக்தி பெரமுனவின் (JVP) பாராளுமன்ற உறுப்பினரான அனுரகுமார திஸாநாயக்க, சொகுசு வாகனங்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக இறக்குமதி செய்யும் நகர்வானது அரசாங்கத்தின் தற்போதைய நடத்தையை விமர்சிக்கும் பின்வரிசைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவினைப் பெறவே என தனது சந்தேகத்தினை வெளிப்படுத்தியிருந்தார்.

ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் திசாநாயக்க பின்வருமாறு கூறியிருந்தார்: நானும் சில ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்களும் 15, ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வாகனங்களை கொள்வனவு செய்தபோது இன்னும் சிலர் அதிகபட்ச தொகைக்கு வாகனங்களை கொள்வனவு செய்தார்கள். இந்தக் காலகட்டத்தில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் வாகனங்கள் பற்றி பேச முடியுமா? பாராளுமன்ற உறுப்பினரின் காலத்தில் அவரது கடமைகளை ஆற்றுவதற்காக ஓர் வாகனத்தை வழங்குவது அவசியமானது என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். பி.சி.ஆர். சோதனைகள், தடுப்பூசிகள் போன்றவற்றிற்குப் பணம் இல்லாத நிலையில் அவசர சிகிச்சைக்கான படுக்கைகள் குறைவாகவும், இந்நாட்டு மக்கள் தாம் நோய்க்கிருமியின் தொற்றுக்கு ஆளாகிவிடுவோமோ என்று அஞ்சி இறக்கும் பயத்தில் இருக்கின்ற நிலையில் இதுவொரு மனிதாபிமானமற்ற மனநிலையைக் காட்டுகின்றது என்று கூறியிருந்தார்.

அடுத்ததாக 'இட்டுகம: கொவிட்-19 சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தினது' வகிபங்கு மிகவும் முக்கியமானது. பொதுமக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் தலையீட்டின் அளவானது பிரச்சினைக்குரியதாகக் காணப்படுகின்றது. மேலே கூறப்பட்டவாறு நிதியத்துக்கான பணமானது பெரும்பாலும் பொதுமக்களிடமிருந்தே கிடைக்கப்பெற்றது. இந் நிதியத்தின் பணமானது புத்திசாதுரியமான வகையில் பயன்படுத்தப்பட்டதா மற்றும் சேமநலன் திட்டங்களுக்காக எவ்வளவு செலவளிக்கப்பட்டது போன்ற முக்கிய கேள்விகள் எழுந்தன. மார்ச் 2021இல் வெரிற்றே ஆய்வானது (Verité Research) நிவாரணப் பணிகளுக்கான இட்டுகம நிதியத்தின் நிதிகள் மற்றும் சமூக சேமநலன் நிகழ்ச்சித் திட்டத்துக்கான ஒதுக்கீடுகள் குறித்த தகவல்களை விசாரணை செய்து தகவல் அறிவதற்கான வேண்டுகோள் ஒன்றினை ஜனாதிபதி காரியாலயத்திற்கு முன்வைத்தது.

செயலகத்தினால் நிதியத்தின் 6% (105 மில்லியன்) செலவுகளுக்குக் கணக்கினைக் காட்டக்கூடியதாக இருந்தது. இவையும் சோதனைகள், தனிமைப்படுத்தல் வசதிகள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கே செலவு செய்யப்பட்டிருந்தன. மீதமுள்ள நிதியானது தடுப்பூசித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. பின்னர் மே 2021 இல் ஜனாதிபதி ஊடகப்பிரிவினால் வெளியிட்ட அறிவித்தலின்படி, சமூக சேமநலனுக்கு எவ்விதமான ஒதுக்கீடுமின்றிய நிலையில் நிதியத்தின் 23% செலவுகளுக்கான கணக்குகள் முன்வைக்கப்பட்டிருந்தன. சமூக சேமநல நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவுவதே நிதியம் ஆரம்பிப்பதற்கான நோக்கமாகக் காணப்பட்டாலும் அத்தகைய செயற்பாடுகளுக்கு நிதியத்திலிருந்து எவ்வித பணமும் செலவளிக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மே 2021இல் இடம்பெற்ற பிறிதொரு மிக முக்கியமான விடயம் என்னவெனில், 625 மில்லியன் ரூபாய் பணத்தினை வெளிப்புற உடற்பயிற்சி நிலையத்துக்கு ஒதுக்கீடு செய்தமையானது பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் பொறுப்பற்ற மற்றும் அக்கறையற்ற நடத்தைப் பாங்கினை வெளிப்படுத்துகிறது. நாடு மோசமான மூன்றாவது அலையால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் சமூக ஊடகங்களில் அதிகரித்து வந்த பொதுமக்களின் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில், நாமல் ராஜபக்ஷ தனது முகநூல் பதிவில் அரசாங்கம் பெருந்தொற்று நிலைமைக்கு முன்னுரிமை அளிக்கும் என்றும் வெளிப்புற உடற்பயிற்சி நிலையங்களுக்கான பூர்வாங்க வேலைகள் மட்டும் இப்பொழுது முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். கொவிட்-19 உடன் தொடர்பான நிவாரணப் பணிகளுக்கு இந்தப் பணம் நிதி அமைச்சுக்குத் தேவைப்பட்டால் அத்தகையதொரு அவசரகால நிலைக்காக தாம் அதனைக் கொடுக்கத் தயார் எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

டிசம்பர் 2020 ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கைக்கான டிரான்ஸ்பேரன்சி இன்றநெசனல் (Transparency International, Sri Lanka) நிறுவனமானது 5,000 ரூபாய் அத்தியாவசிய மாதாந்தக் கொடுப்பனவு வவுனியாவில் 28 பேருக்கு நிராகிக்கப்பட்ட அனுபவங்களைக் கொண்டு சேமநல நிதிகளை நிர்வகித்தல் தொடர்பாகத் தனது குரலை வெளிக்காட்டியது.

குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்ந்த சிலருக்கு கொடுப்பனவுக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் கொடுக்கப்படாததோடு கிராம நிர்வாகத்தினால் முறையான விளக்கமும் அளிக்கப்படவில்லை. கொவிட்-19 நிவாரண உதவிகளை வழங்குவதில் காணப்பட்ட நிர்வாகத் திறமையின்மைக்கு இதுவோர் உதாரணமாகும். உதவிகளை விநியோகிக்கும் பொறிமுறை முழுமையும் நிர்வாகத் திறமையின்மையிலிருந்து அரசியல் ஆதாயங்களுக்காகக் கையாளுதல் மற்றும் சில சந்தர்ப்பங்களில் களவாடுதல் போன்ற சர்ச்சைகள் போன்றவற்றால் கறைபடிந்துள்ளது.

மே 2020இல் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரான மகிந்த தேசப்பிரிய கொவிட்-19 நிவாரண நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழு பெற்றுக்கொண்ட முறைப்பாடு ஒன்றினை வெளியிட்டிருந்தார். அரசியல் சகாயத்தினை நல்குவதற்காக வாக்காளர் பதிவுப் பட்டியலில் மோசடிகளை மேற்கொள்ளுதல், இடம்பெறவுள்ள தேர்தல்களைக் கருத்திற்கொண்டு அரசியல் கட்சிகளைப் பிரபல்யமடையச் செய்ய சேமநலக் கொடுப்பனவுகளை வழங்குதல், அரசியல் விசுவாசம் காரணமாக தகுதியுள்ள ஆட்களின் சேமநலக் கொடுப்பனவைப் பறித்தல் போன்றன உள்ளிட்ட முறைகேடுகளை அக்கடிதம் சுட்டிக்காட்டியிருந்தது.

கொடுப்பனவுகளைப் பறித்தல் தொடர்பாக பல அனுபவங்களை பொன்சேகா (2020) பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ஒன்றுபட்ட சுய தொழில் தொழிலாளர்கள் சங்கத்தினது (United Self Employed Workers' union) தலைவரின் கருத்துப்படி, புறக்கோட்டையில் மாத்திரம் கிட்டத்தட்ட 50,000 வரையான சுயதொழில் மேற் கொள்கின்ற தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். எனினும் அவர்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவு கொடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

மேலும் 5,000 ரூபாய் அத்தியாவசியக் கொடுப்பனவை விநியோகிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 100,000 ரூபாவை மாத்தறை மாவட்ட கிழக்கு கித்தலகம பிரதேசத்தைச் சேர்ந்த மோசடியான உத்தியோகத்தர் ஒருவர் களவாடியமை தொடர்பாகவும் பொன்சேகாவினது கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வச்சந்நிதி...

இதில் சமரபாகு, மாவடியைச் சேர்ந்த சந்தரம் மோகன்ராஜ் (வயது-51) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சமரபாகு பகுதியிலிருந்து செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு காவடி எடுத்துச் சென்றவர்களுடன் நடந்து சென்ற மேற்படி குடும்பஸ்தர் ஆலயத்தில் இரவு 7.00 மணியளவில் மயங்கிபடுத்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் ஏற்றி வீட்டுக்கு கொண்டு செல்கின்றபோது இடையில் மீண்டும் மயங்கி விழுந்துள்ளார்.

மேற்படி நபரை முச்சக்கரவண்டியில் ஏற்றி வல்வெட்டித்துறை, ஊறணி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது. (ம-7,9,60)

## உண்டியல்...

தினம் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் வசந்த மண்டபத்தில் இருந்த ஒரு தொகைப் பணமும் களவாடப்பட்டுள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவத்துடன் ஆலயத்தில் நெருங்கிச் செயற்பட்டவர் சம்பந்தப்பட்டுள்ளமை சிசிரிவி காட்சிகள் மூலம் உறுதியாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஆலய குருக்கள் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாகவும், சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,9,104)

## கனடா...

6 நபர்களிடம் கனடா அனுப்புவதாக கூறி யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் பணம் பெற்றுள்ளார்.

ஒருவரிடம் இருந்து 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 6 பேரிடம் பணம் பெற்றுள்ளதுடன், பிறிதொருவரிடம் 3 பவுண் சங்கிலி ஒன்றையும் பெற்றுள்ளார்.

எனினும் கனடா அனுப்பாது மோசடி செய்ததாக பாதிக்கப்பட்ட நபர்கள் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரத்நாயக்கா தலைமையில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியைச் சேர்ந்த 41 வயது நபர் ஒருவரை கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,250)

## சீனாவின்...

சீனாவின் சினோபெக் நிறுவனத்துடன் அரசாங்கம் ஒப்பந்தம் செய்து கொண்டதன் பின்னர், நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது எரிவாயு நிலையமான மத்தேகொட சி & ஏ பெற்றோல் நிலையம் சினோபெக் என்ற பெயரில் தனது சேவை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த எரிபொருள் நிலையம் முன்னர் சிபெட்கோவின் கீழ் இருந்ததாகவும், சீனாவின் சினோபெக் உடன் ஒப்பந்தம் செய்து கொண்டதன் பின்னர், அதன் உத்தியோகபூர்வ சின்னத்தின் கீழ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிய எரிபொருள் நிலையத்தில் 16 எரிபொருள் பம்புகள் ஊடாக எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளதுடன், ஒவ்வொரு வகை எரிபொருளுக்கும் மூன்று ரூபாய் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வாடிக்கையாளர் சேவையின் தேவைக்கு ஏற்ப, சினோபெக் நிறுவனம் புதிய பம்புகளை நிறுவி ஒரு வருடத்திற்குள் எரிபொருள் நிரப்பு நிலையத்துடன் பல்பொருள் அங்காடி வளாகத்தை நிர்மாணிக்கவும், எரிபொருள் நிரப்பு நிலையத்தை நவீனப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது. (ம-7,9)

## போதைப்பொருள்...

ஐந்து சந்தேக நபர்கள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை ஆகிய இரு தினங்களும், கடற்படையினர், பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து கூட்டு தேடுதல் நடவடிக்கைளை முன்னெடுத்தனர்.

அதன்போது , சந்தேகத்திற்கு இடமான கப் ரக வாகனம் ஒன்றினை சோதனையிட்டபோது, அந்த வாகனத்தின் பெட்டியின் கீழ் மேலுமொரு பெட்டி அடிக்கப்பட்டு, போதைப்பொருள் கடத்தலுக்கு ஏதுவாக வாகனத்தை மாற்றி அமைக்கப்பட்டு இருந்தமையை கண்டறிந்துள்ளனர்.

அதனையடுத்து வாகனத்தில் பயணித்த இருவரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் மூன்று சந்தேக நபர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் உரும்பிராய், மாதகல் மற்றும் ஊவா மாகாணம், குடா ஓயா ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும், அவர்களிடம் இருந்து கப் ரக வாகனம் , மோட்டார் சைக்கிள் மற்றும் 15 மில்லியன் ரூபாய் பணம் என்பன மீட்கப்பட்டதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களும், மீட்கப்பட்ட பொருட்களும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது. (ம-7,9,33,104)

## பொலிஸ்...

பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்னவென்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்தாவது,

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் தற்போது வடக்கில் உள்ள கட்சியோ அல்லது தெற்கில் உள்ள கட்சியோ விவாதத்தை ஆரம்பிக்கவில்லை. மாறாக ரணில் விக்கிரமசிங்கதான் ஆரம்பித்து வைத்தார். வடக்கில் உள்ள வாக்குகளை இலக்கு வைத்து அரசியல் முன்னெடுக்கப்பட்டுள்ள தந்திரோபாய அரசியல் நகர்வே இது வாகும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதிலேயே ரணில் தீவிரமாக உள்ளார். ஏனெனில் ஏனைய உள்ளூராட்சிசபைத்தேர்தலோ, மாகாண சபைத் தேர்தலோ நடத்தப்பட்டால் அவற்றின் பெறுபேறுகள், தமக்கு ஜனாதிபதி வேட்பாளர் பதவியைப் பெற்றுக் கொடுக்காது என்பது ரணிலுக்குத் தெரியும்.

எனவே, 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தக்கூடிய தலைவர் தான் என்ற மாயையை உருவாக்கி அதன் மூலம் வாக்கு வேட்டை நடத்துவதற்கான அரசியல் உபாயமாகவே 13 குறித்த விவாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. எனவே, 13 தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்பதை முதலில் ஜனாதிபதி அறிவிக்க வேண்டும்.

இரண்டாவது, மாகாண சபைத் தேர்தலை நடத்திய பிறகு 13 பிளஸா அல்லது அதிகாரக் குறைப்பா என்பது பற்றிப் பேசலாம். பொலிஸ் அதிகாரம் வழங்கக்கூடாது. ஏனெனில் இலங்கையில் பொலிஸ் என்பது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் வடக்கில் படையினர் கையகப்படுத்தியுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றார். (ம-7,9)

மெகா பவர்
திகதி 31/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1578
B 23 02 19 36 65
15678

தன நிதானய
திகதி - 2023.08.31
சீட்டிழுப்பு இலக்கம் - 1252
P 06 09 13 42 P
Double Chance 40195

Lucky 7
திகதி 31.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0049
L7 இலக்கம் 3 8
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 6 3 3 9 2 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3465
சீட்டிழுப்பு திகதி 31.08.2023
T 02 03 42 53
T
10389

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.31
சீட்டிழுப்பு இலக்கம் 532
மீனம் 09 22 38 56 மீனம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/31
சீட்டிழுப்பு இலக்கம் 5223
H 8 8 7 8 5 3

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2197 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.08.31 தினம் வியாழக்கிழமை
02 34 41 69 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,089,788.40
65405 220

சனிதா
திகதி 2023.08.31 வெற்றி வாரம் 4358 வர்ணம் சிவப்பு
02 03 62 74 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,965,428.00
75690 895

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3909 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.31 தினம் வியாழக்கிழமை
07 12 20 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,077,124/-
64309 852

திகதி 2023.08.31 வெற்றி வாரம் 1373
G 33 24 55 57 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 434,440,084.20
23442 693
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 624 திகதி 2023-08-31 வர்ணம் நீலம்
N 02 43 50 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,758,816.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2023
சீட்டிழுப்பு திகதி : 2023.08.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,074,968/-
09 35 39 61 I
40682 533

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி

## செப்-5 அகழ்வு ஆரம்பம்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணிகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 5ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு கொக்குதொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி விவகாரம் தொடர்பாக வழக்கின் விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம் பெற்று வந்தது.

இந்தநிலையில், அதன் விசேட வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் அழைக்கப் பட்டிருந்தது.

நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற குறித்த வழக்கு விசாரணையில் சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது, சம்மந்தப்பட்ட சகல தரப்பினரின் ஒத்துழைப்புக்களுடன் எதிர்வரும், 5ம் திகதி முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைக்குழியின் அகழ்வுப்பணிகளை முன்னெடுப்பதற்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-7,255)

## மண்டைதீவு திருவெண்காட்டில் இன்று; இராஜகோபுரத்திற்கு அடிக்கல் நாட்டல்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தில் வீற்றிருக்கும் சிவமாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானின் பொற்சபை மண்டப இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா இன்று வெள்ளிக்கிழமை (01.09.2023) நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும். (ம)

## தொல்பொருள்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியிலே அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை உள்ளிட்ட கட்டுமான பணிகள் தொடர்பிலான வழக்கின் கட்டளைக்காக நேற்றைய தினம் திகதியிடப்பட்டிருந்தது

அந்த வகையிலே நேற்றைய தினம் குருந்தூர் மலை தொடர்பிலான AR/673/18 என்கின்ற வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது ஆலய நிர்வாகம் சார்பிலே முல்லைத்தீவு மாவட்டத்தின் சட்டத்தரணிகள் அனைவரும் முன்னிலையாகி இருந்ததோடு ஆலய நிர்வாகம் சார்பாக நிர்வாகிகள் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் மாகாண சபை விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள்,என பலரும் கலந்து கொண்டனர்

இதே வேளையிலே தொல்லியல் திணைக்களம் சார்பாக தொல்லியல் திணைக்களத்தின் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் உதவி பணிப்பாளர் மற்றும் தொல்லியல் திணைக்கள சட்டத்தரணிகள் பொலிசார் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தனர் நீதிபதி ரி.சரவணராஜா தன்து தீர்ப்பில், "இரண்டு தரப்பினருக்குள் ஏற்பட்ட முரண்பாட்டை சமாதானமாக தீர்ப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் நீதிமன்ற உத்தரவை 3 தடவைகள் மீறி விகாரை அமைத்துள்ளார்" என குறிப்பிட்டார்.

இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர், அந்த இடத்தில் இரண்டு தரப்பினரும் வழிபாட்டு தலங்களை அமைக்க முடியாது என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும், அதையும் மீறி சட்டவிரோத விகாரை அமைக்கும் பணி ஆரம்பித்தது. இது தொடர்பில் ஆலய நிர்வாகத்தினால் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

நீதவான் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டு, சட்டவிரோத கட்டுமானத்தை அவதானித்து, இதற்கு மேல் கட்டுமானம் செய்யக் கூடாது என உத்தரவிட்டிருந்தார். அத்துடன், சட்டவிரோத கட்டுமானத்தை இடிப்பது தொடர்பில் ஆட்சேபனைகளை கோரியிருந்தார்.

தொல்லியல் திணைக்களம், சட்டமா அதிபர் ஊடாக ஆட்சேபனை தெரிவித்தது. சட்டவிரோத கட்டுமானத்தை இடித்தால், தொல்பொருள் சின்னங்கள் சிதையும் என குறிப்பிட்டனர்.

இதையடுத்து, விகாரையில் மேலதிக கட்டுமானங்களை மேற்கொள்ள கூடாதென கட்டளையிட்டு, இதை பொலிஸார் கண்காணிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டிருந்தார்.

எனினும், அதையும் மீறி கட்டுமானம் செய்யப்பட்டு, விகாரை பணி பூர்த்தியடைந்தது. இது தொடர்பில் ஆராய அண்மையில் நீதிவான் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் 3 முறை நீதிமன்ற உத்தரவை மீறி விகாரை அமைத்ததாகவும், பொலிஸார் தமது கடமையை நிறைவேற்றவில்லையென்றும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த தீர்ப்பிற்கு எதிராக விகாரை தரப்பினர் மேன்முறையீடு செய்ய வாய்ப்புள்ளது. எனினும், தற்போதைய தீர்ப்பில் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லையென சட்டவல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், முன்னைய தொல்பொருள் திணைக்கள பணிப்பாளருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தொடர்வது தொடர்பிலும் தற்போது தமிழ் தரப்பினரால் ஆராயப்பட்டு வருகிறது. (ம-7,299)

## பெற்றோல்...

கரிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 42 ரூபாவினால் அதிகரித்து புதிய விலை 417 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 35 ரூபாவினால் குறைத்து, புதிய விலை 341 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 01 ரூபாவினால் அதிகரித்து, புதிய விலை 359 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 05 ரூபாவினால் குறைத்து. 231 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.(ம-7)


DCM யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகில்
கணக்கீடு
A/L 2025 கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம்பம் நாளை 9 A.m
A/L 2024 கணக்கீட்டு எண்ணக்கரு
ஆரம்பம் நாளை 10 A.m
A/L 2023 முகாமைக் கணக்கீடு
ஆரம்பம் நாளை 11 A.m
(16904)
இலவசக் கருத்தரங்கு
புதன், வெள்ளி 3.30 - 5.30 P.m
S.தவா
B.Com(Hons)(Acc.spl) PGDE
M.A in Education
'முடிவு அமைவது உங்கள் மனதில்
விடிவு அமைவது எங்கள் கற்பித்தலில்'
077 239 5858

DCM யாழ் நகர்
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம்
நாளை 02.09.2023
8.00 A.m
(16907)
077 011 9434 நிர்வாகம்

வெளிநாடுகளுக்கான
DHL பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P : 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna.
(16905)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16840)
076 825 7716 (ஆகாஸ்)

CANADA VISA
1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.(jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Contact : VISA Consultant,
136, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584
(16906)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
(C-7173)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிர்கபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு ஆசிரியை/அரச திணைக்களத்தில் தொழில்புரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
(மணமகள் வடமராட்சிக்குள் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது)
(16901)
077 864 9878,077 634 3103 (viber)

கனடா மற்றும்
அவுஸ்திரேலியா செல்ல
Skilled Migration visa to Canada and Australia
RM Associate Facilitators
Visit on Appointment
(16899)
spraj54@gmail.com , 439 Temple Road Nallur
077 768 7821

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE
(C-7173)
0777-068-777
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

மலிவு விற்பனை
SILVER SHIELD
கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WesternUnion WU
INSTANT CASH
Ria
MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும்.
(C-7172)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்
வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்
காலம் - 17.09.2023
நேரம் - காலை 10.00 மணி
இடம் - வயாவிளான் தெற்கு முன்பள்ளி
வயாவிளான் தெற்கு
ஆலய பரிபாலன சபையினர்
(16898)

காணி விற்பனைக்கு
கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16878)
077 728 6061


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org